Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள்: 04    விலைரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஹூ ஆனி மீ 15 ஆம் உ    வெள்ளிக்கிழமை    (29 - 06 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஃ 5    ஓசை 131

## அனாதைகள் இல்லத்தின் மீது விமானத்தாக்கு; 10பிள்ளைகள்காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தருமபுரம் பகுதியில் நேற்றுக்காலை 9.15க்கு சிறிலங்கா அரசின் புதுரக யுத்தவிமானமொன்றினால் றொக்கட் மோட்டார் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இப்பயங்கரத் தாக்குதலால் தருமபுரம் கஸ்தூரிபாய் அனாதை இல்லத்தைச் சேர்ந்த பத்துப் பெண்பிள்ளைகள் படுகாயமடைந்தனர். இதிலொருவரின் குடல் வெளியேறிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அனாதை இல்லத்தின் தண்ணீர்த் தொட்டி முற்றாகச் சேதமானதுடன் கட்டிடங்களும், அனாதை இல்லத்தைச் சுற்றியுள்ள பல வீடுகளும் சேதமடைந்தன.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது: (4ஆம்பக்கம் பார்க்க)

## விமானிகள் இலக்குத்தவறினர் - ரஞ்சன்
## கண்டபடி குண்டுவீசவில்லை - சிறில்ரணதுங்கா

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற குண்டுவீச்சு விமானத் தாக்குதல்களில் அந்த விமானங்களின் விமானிகளின் இலக்குத் தவறுகளால் பல பொதுமக்கள் இறந்துள்ளனர் என்பதை அமைச்சர் ரஞ்சன் ஜேவிரட்னா ஒப்புக்கொண்டதாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

ஆனால் இதே சமயம் படையினர் ஒருபோதும் கண்டபடி சரமாரியாக குண்டுகளைத் தீர்க்கவில்லை என்றும், பொறுப்பற்ற முறையிலும் நடந்து கொள்ளவில்லைஎனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதிலும் படையினர் அவதானமாக உள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் தற்போதையயுத்தத்தினால் இதுவரை நூற்றி நாற்பது படையினர் கொல்லப்பட்டதாகவும் இருநூறுபேர் காயமடைந்ததாகவும் சிறில்ரணதுங்காநேற்றுதெரிவித்தார்.

# மூதூரை நாம் கைப்பற்றவில்லை; அகதிகளுக்கு உணவு போடுகிறோம்

## - ரஞ்சன் விஜேரட்னா

(கொழும்பு)

மூதூர் பகுதியை சிறிலங்கா படை இன்னமும் கைப்பற்றவில்லை யெனவும் மன்னார், வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் இன்னமும் சண்டை நடைபெறுகிறதென்றும் சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருக்கிறார்,

நான்குலட்சம் தமிழ் அகதிகளுக்கு உணவு வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வாராந்த செய்தியாளர் மாநாட்டில்,அமைச்சர் வடக்கு கிழக்கு பகுதி நிலைமைகள் குறித்து விளக்கினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பஸ் பயணி மானபங்கம்

(திருமலை)

சீனக் குடாவில் நான்காம் கட்டை என்னுமிடத்தில் வெளி நாட்டில் இருந்த பெண் பஸ்சில் வந்து கொண்டிருந்த போது ஸ்ரீலங்கா இராணுவத்தால் பஸ்சில் இருந்து இறக்கிச் சென்று மானபங்கபடுத்தப்பட்டார்.

### மானபங்கம் படுகொலைகள்

(திருமலை)

திருமலையில் காவாத்திக் குடாவில் ஒரு பெண் சிறிலங்கா இராணுவத்தினால் மானபங்கப்படுத்தப்பட்ட பின்னர் அப்பெண்ணும் அக் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டனர். இச் சம்பவம் கடந்த இருபத்தி ஐந்தாம் திகதி நடைபெற்றது.

### இலங்கை வங்கி திறக்கப்படலாம்

(யாழ்ப்பாணம்)

இப் பகுதியில் நிலவும் பாதுகாப்பு நிலைமை உகந்ததாக அமையின் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கியின் மேற்தரக் கிளை இன்று (29-6-90) வெள்ளிக்கிழமை முதல் காலை 9.00 மணி

# இனப்படுகொலை; தடுத்து நிறுத்துக!

## சிங்கிடம் முதல்வர் கருணாநிதி தொலைபேசியில் வற்புறுத்து

(சென்னை)

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த இந்திய மத்திய அரசு முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கிடம் கேட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் குறித்து முதலமைச்சர் சுமார் இரு மணிநேரமாக பிரதமர் சிங்குடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

தமிழ்ப்போராளிகள் தமக்குள் மோதிக்கொள்வதையும், தமிழகத்தில் கொலைச்சம்பவங்களில் ஈடுபடுவதையும் கட்சி பேதமின்றி மக்கள் கண்டிக்கிறார்கள் என்றும் அதே சமயம் இலங்கையின் சிங்கள அரசு வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களை விமானமூலமும்

## கொக்காவிலில் குண்டுவீச்சு

# வட-கிழக்கு யுத்தம் பாரதம் கவலை!

## இந்திய வெளியுறவு அதிகாரி

(புதுடில்லி)

இலங்கையில் தற்போது வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் யுத்தம் தீவிரமாகி வருவது குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் அறிக்கை ஒன்றை நேற்று விடுத்துள்ளார்.

இந்த யுத்தத்தால் பெருமளவு உயிரிழப்புக்கள்,மக்கள் துன்பம் சஷ்டப்படுவது, ஆயிரக் கணக்கானோர் வீடுவாசல்களை இழந்துள்ளமை என்பன பற்றி இந்தியா வேதனை அடைந்துள்ளதாகவும் அந்த ... கைக்கும் இந்திய அரசு அனுமதி அளிக்காது என்றும் அதில் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் அரசியல் விவகாரம் பற்றிய அமைச்சரவைக்,குழு நேற்று இலங்கையின் தற்போதைய நிலைமைகள் பற்றி விவாதித்தது.

## தம்பலகாமத்தில்விமானத்தாக்கு வீடுகள் சேதம் மக்கள் காயம்

(தம்பலகாமம்)

தம்பலகாமத்தின் மீது ஸ்ரீ லங்கா விமானப்படை விமானங்களும், ஹெலிகப்டர்க ... தியதினால் வீடுகள் பலசேதமடைந்தது பொது மக்களில் மூவர் காயமடைந்தனர்.

# சிங்கிடம் முதல்வர் கருணாநிதி தொலைபேசியில் வற்புறுத்து

(சென்னை)

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த இந்திய மத்திய அரசு முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கிடம் கேட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் குறித்து முதலமைச்சர் சுமார் இரு மணிநேரமாக பிரதமர் சிங்குடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

தமிழ்ப்போராளிகள் தமக்குள் மோதிக்கொள்வதையும், தமிழகத்தில் கொலைச்சம்பவங்களில் ஈடுபடுவதையும் கட்சி பேதமின்றி மக்கள் கண்டிக்கிறார்கள் என்றும் அதே சமயம் இலங்கையின் சிங்கள அரசு வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களை விமானமூலம் குண்டு வீசி இனப்படுகொலை செய்வதை கண்டிக்கிறார்கள் என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என்ற ஒருமித்த குரலை தமிழ்மக்கள் எழுப்புகிறார்கள் இதனை தடுத்து நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் என்றும் முதலமைச்சர் பிரதமர் சிங்கிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு நிலைமைகள் குறித்து தமக்கும் பல தகவல்கள் வந்துள்ளதாகவும் மத்திய அரசு உரிய முயற்சிகள் மேற்கொள்ளும் எனவும் பிரதமர் சிங் முதலமைச்சருக்கு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் கோரிக்கையை பிரதமர் ஆழ்ந்த கவலையுடன் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொக்காவிலில் குண்டுவீச்சு காடு பற்றி எரிகிறது

(கொக்காவில்)

கொக்காவிலைச் சுற்றி நேற்றுபிற்பகல் மூன்றுமணியளவில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு பெம்பர்களும், இரண்டு ஹெலிகப்டர்களும் குண்டு வீசித் தாக்கின. இக் குண்டுவீச்சால் கொக்காவில் பகுதியில் காடுகள் தீப்பற்றி எரிவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விடுதலைப்புலிகள் பத்திரிகை பதிப்பகம் மீது குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

தருமபுரத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வப் பத்திரிகையான ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' பத்திரிகைப் பதிப்பகம் நேற்றுக் காலை ஸ்ரீலங்கா விமானப்படையால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலால் பலத்த சேதமடைந்தது.

பதிப்பகத்தில் கடமையிலீடுபட்டிருந்த ஊழியர்கள் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். (மு)

## புலிகள் - இராணுவம் மோதல் 3இராணுவம்பலி; நால்வர்காயம்

(திருமலை)

திருமலை பதின்மூன்றாம் கட்டை இராணுவ முகாமிலிருந்து வெளியேற இராணுவம் முற்பட்டபோது விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் கடும் சண்டை மூண்டது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாமிற்குள் திரும்பிச்சென்றனர்.

இந்த பதில் தாக்குதலின் போது மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சிறியளவு மருந்து வந்தது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் இருந்து யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மருந்துவகைகள் சில நேற்று முன்தினம் மாலை ஏழுமணியளவில் வந்துசேர்ந்துள்ளது.

இம் மருந்துப் பொருட்கள் அகதி முகாம்களுக்கோ, வைத்தியசாலைகளுக்கோ, விநியோகிக்கப்படமாட்டாது. ஏனெ

(4ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவும் ரஞ்சனும்; குட்டு அம்பலமாகிறது!

(கொழும்பு)

ராஜீவ் காந்தி அரசுக்கு எதிராக செயற்பட்ட விடுதலைப்புலிகள் இந்தியப்படையை எதிர்த்துப் போராடி ஆயிரத்து ஐந்நூறு இந்திய ஜவான்களை கொன்று, சுமார் மூவாயிரம் பேரைக் காயப்படுத்தியுள்ளனர் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்துள்ளார். இந்தியப்படை இலங்கையில் நிலைகொண்டு இருப்பதற்கு ஐம்பது கோடி அமெரிக்க டாலர்களை இந்தியா செலவிட நேரிட்டதற்கும் (4ஆம் பக்கம் பார்க்க)

(திருமலை)

திருமலையில் காவாத்திச் குடாவில் ஒரு பெண் சிறிலங்கா இராணுவத்தினால் மானபங்கப்படுத்தப்பட்ட பின்னர் அப்பெண்ணும் அக் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டனர். இச் சம்பவம் கடந்த இருபத்தி ஐந்தாம் திகதி நடைபெற்றது.

## இலங்கை வங்கி திறக்கப்படலாம்

(யாழ்ப்பாணம்)

இப் பகுதியில் நிலவும் பாதுகாப்பு நிலைமை உகந்ததாக அமையின் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கியின் மேற்தரக் கிளை இன்று (29-6-90) வெள்ளிக்கிழமை முதல் காலை 9.00 மணி தொடக்கம் 9.30 மணிவரை

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களுக்கு சம்பளமில்லை

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்கு யூன் மாதத்திற்கான சம்பளம் வழங்கப்படவில்லை.

சம்பளத்திற்குப் பதிலாக சம்பளத்தின் குறைந்தளவு

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணம்

(பலாலி)

பலாலியில் நேற்று பிற்பகல் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட மோதல் குமரன் (நெடுங்கேணி) உமாகாந் ஆகியஇரு விடுதலை புலிகள் மரணமடைந்தார்கள் இவர்களுக்கு விடுதலைப் புலிகள்வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவில் கடும் சண்டை

(வவுனியா)

வவுனியா தாண்டிக் குளத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் நேற்றுக் காலை கடும் சண்டை மூண்டது. இச் செய்தி அச்சுககுப் போகும் வரை சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

## ஹெலி தாக்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஹெலித் தாக்குதலில் விசுவநாதர் கைலாயநாதன் (வயது 32) என்பவர் உயிரிழந்துள்ளார்.

இவர் ஈழநாதம் பத்திரிகை அலுவலகத்தின் அச்சகப்பகுதியில் கடமைபுரியும் வி. பத்மநாதன் என்பவரின் சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்திய வெளியுறவு அதிகாரி

(புதுடில்லி)

இலங்கையில் தற்போது வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் யுத்தம் தீவிரமாகி வருவது குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் அறிக்கை ஒன்றை நேற்று விடுத்துள்ளார்.

இந்த யுத்தத்தால் பெருமளவு உயிரிழப்புக்கள், மக்கள் துன்பம் சஷ்டப்படுவது, ஆயிரக் கணக்கானோர் வீடுவாசல்களை இழந்துள்ளமை என்பன பற்றி இந்தியா வேதனை அடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மக்கள் வாழும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் விமானத்தாக்குதல்கள் பெரும் கவலை அளிப்பதாகவும் அந்த அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் இன நல்லிணக்கச் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு இந்தியா பெரும் முக்கியத்துவம் அளிக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சகல குழுக்களுடனும் பேச்சு நடாத்த வேண்டும் எனவும் இந்த தீர்வு இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்குள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் எந்த போராளிக்குழுவினதும் நடவடிக்கைக்கும் இந்திய அரசு அனுமதி அளிக்காது என்றும் அதில் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் அரசியல் விவகாரம் பற்றிய அமைச்சரவைக், குழு நேற்று இலங்கையின் தற்போதைய நிலைமைகள் பற்றி விவாதித்தது.

## தம்பலகாமத்தில்விமானத்தாக்கு வீடுகள் சேதம் மக்கள் காயம்

(தம்பலகாமம்)

தம்பலகாமத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்களும், ஹெலிகப்டர்களும் நேற்று முன்தினம் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதினால் வீடுகள் பலசேதமடைந்தது பொது மக்களில் மூவர் காயமடைந்தனர்.

விமானப் படையின் குண்டு வீச்சின் காரணமாக பதினைந்து வீடுகள் தீப்பற்றிக் கொண்டன.

## நயினாதீவில் கடற்படை அடாவடித்தனம்; பொருட்களுக்கு தட்டுப்பாடு

(நயினாதீவு)

நயினாதீவில் உணவுப் பொருள், மருந்துப் பொருள் எதுவுமின்றி மக்கள் அவதிப்படுவதாக அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நயினாதீவிலுள்ள மூன்று கூட்டுறவுக் கிளைகளிலும் உணவுப் பொருள் எதுவும் இன்றி சுடைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றனவாம்.

மக்கள் அங்கிருந்து வெளியேறி குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் தங்குவதற்கும் அங்குள்ள கடற்படையினர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குழந்தையை இராணுவத் தாக்குதலினால் தவறவிட்ட பெற்றோர்

திருமலையிலிருந்து வடமராட்சி கிழக்கிற்கு வந்து சேர்ந்துள்ள குடும்பம் ஒன்று, தனது ஒரேஒரு குழந்தையைக் கைதவற விட்டுவிட்டு வந்து சேர்ந்துள்ளது.

அங்கு ஏற்பட்ட இராணுவத்தாக்குதலினால் நாலா பக்கம் மக்கள் சிதறியோடிய போது, இக் குடும்பமும் சிதறியோடியதினால்அக்குடும்பம் அக்குழந்தையைக் கைதவற விட நேர்ந்ததாம்.

கட்டைக்காட்டில் உள்ள அகதிகள் முகாமில் அந்தக் குழந்தையின் தாயும், தந்தையும் அழுதவண்ணமிருக்கின்றார்கள். (36)

## நெடுந்தீவில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியாகயாழ்நகரில் நிகழும் விமானத்தாக்குதல் காரணமாக நெடுந்தீவுக்கான அரிசி மா, சீனி ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெறமுடியவில்லை.

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தமது கையிருப்பில் வைத்திருந்த பொருட்கள் முடிந்து விட்டதாகவும், உணவுப் பொருட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உயிரில்தானா கருணாநிதிக்கு அக்கறை?

--ரஞ்சன் கேட்கிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பொய்ப்பிரசாரத்தை இந்திய மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பது குறித்து தான் கவலையடைவதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்துள்ளார். நேபாம் குண்டு பாவிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் கூறுவதை எல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி நம்பக்கூடாது (4ஆம் பக்கம் பார்க்க)

# மீன்பிடிப் படகுகள்மீது கடற்படை தாக்கு

(வல்வெட்டித்துறை)

புதன் காலை 6.30 மணியளவில் கரையிலிருந்து சுமார் 1 மைல் தொலைவில் மீன்பிடித்துக்கொண்டிருந்த பிளாஸ்டிக் மீன்பிடிப் படகுகள் மீது கடற்படை தாக்கியது.

மேற்படி தாக்குதல்களால் நான்கு வள்ளங்கள் பெரும் சேதமடைந்தன. எனினும் மீனவர்கள் சாதுர்யத்தைக் கையாண்டமையால் எவ்வித காயமுமின்றித்தப்பினர்.

இத்தாக்குதலில் கடற்படையினரால் பயன்படுத்தப் பட்ட குண்டுகள் சில பொலிகண்டியைச் சேர்ந்த திருமதி சின்னராசா மல்லியக்கண்டு (வயது 57), திருமதி பூபாலசிங்கம் தேவநாயகி (வயது 32) ஆகியோரைக் காயப்படுத்தியது. இவ்விருவரும் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். (68)

# மக்கள் வெளியேற்றம்

(விசேடநிருபர்)

கொக்குவில் புகையிரத நிலையப் பகுதி மக்கள், பொன்னம்மான் கிராம குடியேற்ற வாசிகள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

கடநத செவ்வாயன்று இரவு ஹெலிக் குண்டு வீச்சுக்கு இலக்காகிய ஒரு வீட்டில் பலர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கொக்குவில் மக்கள் பீதியால் இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருவதால் அப்பகுதி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

சேர் பொன். இராமநாதன் வீதியில் (நாச்சிமார் கோவில் வீதி) யாழ் பல்கலைக்கழகத்தை அண்மித்து வாழ்பவர்களும் இடம் பெயர்ந்து சென்றுகொண்டிருக்கின்றனர். (21)

# 317 பணிப்பெண்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

சில வேலைவாய்ப்பு முகவர்களின்மோசடி நடவடிக்கைகளால் கடந்த சில தினங்களில் முன்னூற்றி பதினேழு வீட்டுப் பணிப்பெண்கள் வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர் என்று தொழில் அமைச்சர் பிரேமச் சந்திரா தெரிவித்தார்.

அண்மையில் குவைத்துக்கு தான் சென்றபோது பல இலங்கைப்பெண்கள் அங்கு படும் அவதிகளை தான்நேரில் கண்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்

இதன் காரணமாக குவைத்துக்கு பெண்களை அனுப்புவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்

# தமிழ் மக்களைக் கொல்லும் போக்கைக் கண்டிக்கிறோம்

(வவுனியா)

தமிழ் மக்களுக்கு எதிராக தாக்குதல் சம்பவம் எதிலும் தாம் ஈடுபடவில்லை. விடுதலைப்புலிகளுக்கு எதிராகவே தாம் போராடுகிறோம் என்று அரசு அறிவித்துக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களை அரசு கொடுமைப்படுத்தி வருகிறது. அரசின் இந்தப் போக்கை நாம் கண்டிக்கின்றோம்.

வவுனியா உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பகுதி வட்ட அவை அண்மையில் கூடிய கூட்டத்தில் அரசின் போக்கை கண்டித்து கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. அத்தீர்மானத்திலேயே மேற்படி குறிப்பிடப் பட்டுள்ளது.

வவுனியாவில் தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளை அழிக்கும் வேலைகளில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. தமிழ் மக்களுக்குச் சொந்தமான அரிசி ஆலைகளையும் சடைகளையும் வீடுகளையும் இராணுவம் அழித்து வருகிறது.

தற்போது பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு அகதிகளாக வெளியேறியுள்ளார்கள்.

அகதிகளாக வெளியேறி, பாடசாலைகளிலும், கோயில்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு அரசாங்கத்தால் மருத்துவ வசதிகளோ, உணவு வசதிகளோ உடுபுடவை வசதிகளோ வழங்கப்படவில்லை.

மேற்படி வசதிகள் அற்ற காரணத்தினால் பல அகதிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



# ஓய்வு பெறுவதற்கான கடைசித் திகதி ஜூன் 30

(கொழும்பு)

இலங்கை போக்கு வரத்து சபை ஊழியர்கள் சுயமாகவே தமது பதவிகளில் இருந்து ஓய்வு பெறுவதற்கான கடைசித்திகதி இம்மாதம் 30 ஆம் திகதி என இ. போ. சபை நிர்ணயித்துள்ளது.

இதற்கு முன்பாக விண்ணப் பப் படிவங்களை அனுப்பி வைக்கவேண்டும் எனவும் கேட் கப்பட்டுள்ளது.

சுயமாகவே வேலையில் இருந்து விலகிக்கொள்ளுதல் என்ற திட்டத்தின் கீழ் இது வரை 8000 ஊழியர்கள் விண்ணப்பப்படிவங்களை அனுப்பியிருப்பதாலும் இ. போ. சபை அறிவித்தது.

வன்னிப் பிரதேசத்துக்கு

# சுகாதாரவசதி செய்வதில் செஞ்சிலுவைச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, அலம்பில் ஆகிய பகுதிகளில் உள்ள அரசினர் வைத்தியசாலைகள் பல நாட்களாக தொடர்ந்து இயங்கவில்லை இப்பகுதிகளுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரே சுகாதார வசதிகளை செய்து வருகின்றனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, அலம்பில்' ஆகிய பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகள் தொடர்ந்து பூட்டப்பட்ட நிலையில் உள்ளது.

ஆனால் அலம்பில் மத்திய அரசினர் வைத்தியசாலையை தற்பொழுது யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற செஞ்சிலுவைச் சங்கத்தினரே நடத்துகின்றனர். மேலும் முல்லைத்தீவிலுள்ள நோயாளர்களுக்கு அலம்பில் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்படுகிறது. அத்துடன் உடையார்கட்டுப் பகுதியிலுள்ளவர்களுக்கு புதுக்குடியிருப்பிலுள்ள செஞ்சிலுவைச்சங்கத்தினர் மருத்துவ வசதிகளை அளிப்பார்கள்.

க. பொ. த. சாதாரண தரம்

# அடுத்த வருடம் முதல் பொது அறிவு வினாப்பத்திரம்

(கண்டி)

க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்கு அடுத்த வருடம் முதல் பொது அறிவு வினாப் பத்திரமும் சேர்க்கப்படவுள்ளது என கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறும் என்றும் அவர் சொன்னார்.

சகல மாணவருக்கும் ஆண்டு ஒன்று முதல் தமிழ், சிங்கள, ஆங்கில அரிச்சுவடிகளை போதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஆங்கில அறிவை மாணவர்களுக்கு விருத்தி செய்ய சுமார் நாலாயிரம் ஆங்கில ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

ஆங்கிலமொழி நிகழ்ச்சிகளை தினமும் வானொலி, தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இவ்வாறு அவர் கூறினார்.

## கிராம சேவையாளர் அசிரத்தை

(யாழ்ப்பாணம்)

அகதிகளாக இடம் பெயர்ந்து வந்தவர்களின் விபரங்களை சேகரிக்கும் வேலைகளில் சில கிராமசேவையாளர்கள் அசிரத்தையாக நடந்துகொள்வதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் இந்த கிராம சேவையாளர்களிடம் தமது நிலமை குறித்து எடுத்துக்கூறினால் பல்வேறு கேள்விகளை கிராமசேவகர்கள் கேட்பதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## நிவாரணம் கோரி முறைப்பாடு

# விமானத் தாக்குதலால் வவுனியாவில் பலர் காயம்

(வவுனியா)

செவ்வாய்க்கிழமை (26-06-90) மாலை வவுனியாவில் பல இடங்களில் பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இரு பொம்மர்கள் மேற்படி தாக்குதல்களில் ஈடுபட்டன.

தாண்டிக்குளம் ஓமந்தை, புதுக்குளம் போன்ற பகுதிகளில் பொம்மர் தாக்குதல் திடீரென மேற்கொள்ளப்பட்டது.

ஓமந்தை சனசமூகநிலையத்தருகில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி சம்பவத்தில் ஆறு பொதுமக்கள் காயங்களுக்குள்ளானார்கள். இவர்கள் நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தாண்டிக்குளம் விவசாயக் கல்லூரியருகில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அரச பண்ணைக்கு சொந்தமான கட்டிடம் ஒன்று இடிந்தது.

புதுக்குளம் பிள்ளையார் கோயிலருகில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தென்னை மரம் ஒன்று முறிந்து விழுந்தது.

வவுனியா மாவட்டத்தில் முதன் முதல் பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதுதான் முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

வெளிநாட்டில் பெண்கள் வேலைவாய்ப்பு

# விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுப்பது குறித்து தொழில் அமைச்சின் விதிகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு நடந்து குற்றவாளிகளாக காணப்படுபவர்கள் மீது ஒருலட்சம் ரூபா வரையான அபராதம் விதிக்கப்படும்.

மேலும் இவர்களுக்கு ஒரு வருடகால சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என்று தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் ஜீ எம் பிரேமச் சந்திரா தெரிவித்தார்.

இது தொடர்பான திருத்த சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.


## இடம்மாற்ற அறிவித்தல்

அண்ணா கோப்பிக்கடை- நவீனசந்தை யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்யும் முகமாக தற்காலிகமாக திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ளதென்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அண்ணா கோப்பிக்கடை
திருநெல்வேலி.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

( B / 1204 )



## மேஜர் றஞ்சன் (சுரேஷ்)

அன்னை மடியில் 27 - 2 - 1968

ஆண்டவன் அடியில் 29 - 6 - 1989

திதி: 18 - 6 - 1990

தமிழ் ஈழம் மலர்வதற்கு உழைப்பை நல்கித்
தளராது போரிட்டாய்; தருக்கர் தம்மை
இறுதிவரை எதிர்த்த மறவேங்கையே! நீ
இம் மண்ணின் உயிர் மூச்சாய் என்றும் வாழ்வாய்!
ஒரு நாளில் தமிழ் ஈழம் மலரும்போது
உன் வீரம் கொடி கட்டிப் பறக்கக் காண்போம்!
உயிரினும் மேலாகத் தமிழ் ஈழத்தை
உத்தமனே நேசித்தாய் உயிரை ஈந்தாய்!
உன் பெருமை உலகுள்ள காலம்வரை வாழும்
நீ என்றும் வாழ்ந்திடுவாய் எம் இதயந் தன்னில்!

தந்தை, தாய், சகோதரிமார், சகோதரன்மார், மச்சான்மார், மச்சாள், மாமாமார், மாமிமார், சிறியதாய்மார், நண்பர்கள்.

''தாயகம்''
பன்னாலை, தெல்லிப்பழை.

(R 388)

மான அரிசி ஆலைகளையும் சடைகளையும் வீடுகளையும் இராணுவம் அழித்து வருகிறது.

தற்போது பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு அகதிகளாக வெளியேறியுள்ளார்கள்.

அகதிகளாக வெளியேறி, பாடசாலைகளிலும், கோயில்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு அரசாங்கத்தால் மருத்துவ வசதிகளோ, உணவு வசதிகளோ உடுபுடவை வசதிகளோ வழங்கப்படவில்லை.

மேற்படி வசதிகள் அற்ற காரணத்தினால் பல அகதிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள அகதிமுகாம்களில் ஏழு குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளன.

புலிகளுக்கெதிரான யுத்தம் என்று கூறிக்கொண்டு புலிகளுடன் நேரடி யுத்தத்தில் ஈடுபடாமல் தமிழ் மக்களை அரசு பல்வேறு விதங்களில் தாக்கி வருகிறது.

சொல்வேறு, செயல்வேறாக அரசு நடக்கிறது. அகதி மக்களுக்கு அரசு உடனடி நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக்கண்டனத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி)

இந்தப் பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறும் என்றும் அவர் சொன்னார்.

சகல மாணவருக்கும் ஆண்டு ஒன்று முதல் தமிழ், சிங்கள, ஆங்கில அரிச்சுவடிகளை போதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஆங்கில அறிவை மாணவர்களுக்கு விருத்தி செய்ய சுமார் நாலாயிரம் ஆங்கில ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

## நிவாரணம் கோரி முறைப்பாடு

(ஈச்சமோட்டை)

இராணுவ நடவடிக்கைகளின் நிமித்தம் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளமையினால், தமக்கும் நிவாரணம் வழங்குமாறு இப்பகுதி மீனவர்கள் கொழும்புத்துறை கிராமசேவகரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை கொழும்புத்துறையில் தங்கியுள்ள 796 அகதிக் குடும்பங்களுக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கான ஒரு வாரகாலநிவாரணம் வழங்கும் பத்திரம் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)

## கிராம சேவையாளர் அசிரத்தை

(யாழ்ப்பாணம்)

அகதிகளாக இடம் பெயர்ந்து வந்தவர்களின் விபரங்களை சேகரிக்கும் வேலைகளில் சில கிராமசேவையாளர்கள் அசிரத்தையாக நடந்துகொள்வதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் இந்த கிராம சேவையாளர்களிடம் தமது நிலமை குறித்து எடுத்துக்கூறினால் பல்வேறு கேள்விகளை கிராமசேவகர்கள் கேட்பதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## ஆஸ்பத்திரி அடிக்கல் நாட்டப்பட்டது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் புதிய அறுவைச்சிகிச்சை நிலையம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல்நாட்டப்பட்டுள்ளது.

தென்மராட்சி நோயாளர் நலன்புரி சங்கத்தின் மேற்பார்வையில் 25ஆம்திகதி நண்பகல் அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளவினுள் சம்பிரதாய ரீதியாக நடைபெற்ற இந்த அடிக்கல்நாட்டு வைபவத்தில் வைத்திய அதிகாரி உட்பட நோயாளர் சங்கத்தின் தலைவரும் அடிக்கல்லை நாட்டினர்.

(35)

## அகதிகளுக்கு சுகாதார சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கிராமப் புறங்களில் உள்ள பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் வந்து தங்கியுள்ள அகதிகளின் சுகாதாரம், மருத்துவ வசதிகளை கவனிக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலை புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிப் பிரதேச சுகாதாரக் குழுவினர் துரிதமாகச் செயற்பட்டு வருகிறார்கள். (35)

## வவுனியா கிராமங்களில் தொடர்ந்து ஷெல் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராமப்பகுதிகளில் தொடர்ந்து ஹெலிகொப்ரர் தாக்குதல் இடம் பெற்று வருவது தெரிந்ததே.

கடந்த 24 ஆம் திகதியும் 25 ஆம் திகதியும் ஓமந்தை நகரப்பகுதியில் ஹெலிகொப்ரர் தாக்குதல் இடம்பெற்றது. இத் தாக்குதல் சம்பவங்களில் பெண்கள் உட்படபலர் காயங்களுக்குள்ளானார்கள்.

சி. புஸ்பா (வயது38), சி. முத்துலட்சுமி வயது 28) செ. செல்வகுமார் (வயது 20) கணேசன் (வயது 11) ஆகியோர் 24 ஆம் திகதி இடம் பெற்ற ஹெலிகொப்ரர் தாக்குதலில் காயமடைந்தனர்.

செ. இராஜகுமாரி (வயது 19) பா. திலகவதி (வயது 30) வே. கேதீஸ்வரன் (வயது 31) ஆகியோர் 25 ஆம் திகதி இடம் பெற்ற ஹெலிகொப்ரர் தாக்குதலில் காயமடைந்தனர்.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (தி)

## குவாறி நோக்கி பீரங்கி தாக்குதல்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள குவாறி பகுதியை நோக்கி கடற்படையினர் கடலில் இருந்து நேற்று தாக்குதல்கள் நடாத்தினர்.

ஹெலிகப்ரரும் மாவிட்டபுரம், காங்கேசன்துறை பகுதியில் தாக்குதல்கள் மேற்கொண்டது.


வெளிநாடுகளிலும், கொழும்பிலும் உள்ள உங்கள்
உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக கடிதங்கள்,
புத்தகங்கள், பார்சல்கள், தஸ்தாவேஜுக்கள்
ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்

DHL WORLDWIDE EXPRESS

D. H. L. International Ltd;
C/o. Cosmos Marketing Services
337, Kasthuryar Road, Jaffna.

(B 965)



தில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்யும் முகமாக தற்காலிகமாக திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ளதென்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அண்ணா கோப்பிக்கடை
திருநெல்வேலி.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

( B / 1204 )


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினனட் ஜோக்கின்
(செந்திவேல் சக்திவேல்)
வல்வெட்டித்துறை

ஜனனம் 17 - 07 - 1965 வீரமரணம் 27 - 06 - 1989

இந்த தேசத்தின் விடுதலைக்காய்
எம் தேகத்தினையே
விடுதலை செய்கிறோம்
இரவு வந்தால் விடிவதுபோல்
நாம் தேடும் விடியல்
விரைவில் வந்தே தீரும்!
- ஜோக்கின்

(B 1202)

நண்பர்கள்.

## சிந்தனைக்கு

தம்மால் இயன்றது அனைத்தும் செய்தல் ஒழிய, செய்ய வேண்டியதற்கும் குறைவாகவே செய்வர் மனிதர்.

- தாமஸ் கார்லைல்


ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 29-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


# அணில்பிள்ளை காட்டிய வழி...

இராவணனுடன் போரிட்டு சிறைவைக்கப்பட்டிருந்த சீதையை மீட்டுச்செல்வதற்கு ஸ்ரீராமன் இலங்கைக்கு வரவேண்டியிருந்தது. சேதுசமுத்திரத்தைக் கடந்து வருவதற்கு வானரங்கள் அணைகட்டிக்கொண்டிருந்தன. அங்கு நின்ற ஒவ்வொருவரும் அணைகட்டுவதற்கு தம்மால் இயன்ற உதவியைச் செய்துகொண்டிருந்தனர். அணில்பிள்ளை ஒன்றும்தனது பங்களிப்பைச்செலுத்தியது. கடல்நீரில் தனது உடலை நனைத்துக்கொண்டு மணலில் புரண்டு பின்னர் உடலிலுள்ள மணலை அணைக்கட்டில் கொண்டுபோய் உதறிக்கொட்டியதாம்.

இது கவி கம்பரின் கற்பனையானாலும் எந்த ஒரு முயற்சியிலும் ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டிய அவசியக்கடமையென்பதை அணில்பிள்ளை மூலம் கம்பர் வலியுறுத்தியிருக்கிறார்.

கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக தமிழினத்தைப் பல்வேறு வழிகளிலும் அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த முனைந்தும் தமிழ் மண்ணைப் பறித்தும் இன ஒழிப்பிலீடுபட்டும் வரும் சிறிலங்கா சிங்களபௌத்த பேரினவாதத்தை எதிர்த்துத் தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழினத்தின் இப் போராட்டத்தில் இனவாத சிறிலங்கா சிங்கள அரச படைகளை எதிர்த்து தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் போர்க்களத்தில் நிற்கிறார்கள்.

போர்க்களத்தில் நிற்பவர்கள் இளைஞர்கள். அவர்களும் மனிதர்கள், அவர்களுக்கும் ஆசாபாசங்கள் உண்டு.

ஆனாலும் இனவாத அரசபடைகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் மண்ணை மீட்பதற்கும் அவர்கள் போரிட்டுக்கொண்டு நிற்கிறார்கள்.

உணவில்லாமலும் உணவிருந்தாலும் உண்பதற்கு நேரமில்லாமலும் உறக்கமில்லாமலும் இரவு பகலாக இருந்தும், கிடந்தும், நடந்தும், ஊர்ந்தும் எதிரிகளுடன் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள் அந்த இளைஞர்கள்.

கடந்த இரண்டு வாரங்களாக நடந்துவரும் போரில் சில போராளிகளே போர்க்களத்தில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டவர்கள்.

உதாரணமாக யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைக்குள் ஆயுதங்களை இறக்கவும் இராணுவத்தைப் பலப்படுத்தி வெளியே படையை அனுப்பி யாழ். நகரை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு, ஹெலித்தாக்குதல்களைக் கடுமையாக மேற்கொண்டு வருகின்றன.

## திருக்கோணமலை அகதிகள்:

# இது ஒருசோகக்கதை; துயர் துடைக்க அனைவரும் உதவுக!

ஸ்ரீலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பல ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப் பட்டுள்ளார்கள். திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலேயே அகதிகளின் தொகை பெருமளவாக அதிகரித்துள்ளது.

இவ்வாறு அகதிகளாக்கப்பட்டுள்ள இடங்களில் திருகோணமலைமிகவும் முக்கியமான ஒரு பகுதியாகும்காலத்துக்குகாலம் ஏற்படும் இன அழிப்பு நடவடிக்கைகளால் பாரிய அளவில் அழிக்கப்படுபவர்களும் அகதிகளாக்கப்படுபவர்களும் திருகோணமலையை சார்ந்தவர்களே அதிகம் என்பது சடந்த கால தற்போதைய சம்பவங்களின் மூலம் அறியலாம்.

அகதிகளாக்கப்பட்டுள்ள திருகோணமலைமக்களில் ஒரு பகுதியினர் யாழ் குடா நாட்டுக்கு வந்துள்ளார்கள். பெரும் பகுதியினர் முல்லைத்தீவில் தங்கியுள்ளனர். மேலும் ஒரு பகுதியினர் யாழ்குடா நாடு வந்து கொண்டிருக்கிறார்கள்.

யாழ் குடாநாடு நோக்கி வந்துள்ள இந்த அகதிகள் நல்லூருக்கும் நகருக்குமிடையில் அலைந்து திரிவதாகவும் உணவுக்கும் உடைக்கும் மட்டுமன்றி தங்குவதற்குக் கூட என்ன செய்வோம் என்ற நிலையில் மரங்களுக்குக் கீழும் தாழ்வாரங்களுக்குக் கீழும் முடங்கிப்போய்கிடப்பதாகவும்பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. சிலர் தம்முடன் கொண்டு வந்துள்ள ஒரு சில உடைமைகளை விற்று ஒருவாறு பொழுதைக் கழித்து வருவதாகவும் அச்செய்திகள் கூறுகின்றன.

விருந்தோம்பல் தமிழர்களின் முதற்கடமை என்பது மட்டுமல்ல வந்தோரை வரவேற்று வாழ்விக்கும் பெருமை கொண்டதும் தமிழர் பூமி. இவ்வாறான பெருமை கொண்ட யாழ் பூமியில் அகதிகளாக வந்துள்ள திருகோணமலை மக்களுக்கு இப்படியான ஒரு நிலைமையா? இவர்கள் யார்? எமது சகோதரர்கள் அல்லவா?

இந்த திருகோணமலைஅகதிகள் வெறுமனே வந்தவர்கள் அல்ல. நொந்தவர்கள். தமது உடைமைகளைஇழந்தவர்கள். சொந்தப் பிரதேசத்திலிருந்து சிறிலங்கா இனவெறி பிடித்த இராணுவத்தால்விரட்டப்பட்டவர்கள். தமது உறவுகளை இழந்தவர்களும் கூட.

பலவாறான இழப்புகளுக்கும் உள்ளாகி ஆதரவு நாடி வந்துள்ள இம் மக்களுக்கும் இவ்வாறானஒருநிலைமையா?

காட்டு வழிப் பாதைகளின் ஊடாக சொல்லொணாத் துயரங்களுடன் நடந்து வரும் இந்த அகதிகளிடமிருந்து இரண்டு கடல் பாதை இறங்குத்துறைகளிலும் முறையே 150 ரூபாவிலிருந்தும் 200 ரூபாய் வரையிலான கட்டணம் பெறப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

போராட்டக் காலத்தில் அந்நாட்டு மக்கள் அகதிகளாக்கப்படுவது சகஜமே. வியட்னாம், பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் இந்த அகதி நிலைமை குறித்து நாம் அறிந்துள்ளோம். இருந்தும், இந்த அகதிகள் கவனிப்பாரற்றுப் போகும் ஒரு நிலைமை ஏற்படுவதுதான் இங்கு வேதனைக்குரியது.

போராட்டக் காலத்தில் அந்தப் போராட்டத்தை முன்னெடுத்து போராளிகளினாலோ, அல்லது இயக்கத்தினாலோ அகதிகளின் நலன்களை முழுமையாக கவனித்தல் என்பது நடைமுறைச் சாத்தியமற்ற செயலாகும் என்பதுடன் முடியாத அனுகூலமும் ஆகும். எனெனில் அந்தப் போராட்ட அணி எடுத்திருக்கும் இலட்சியப் பணி அத்தகையது.

இந்நிலையில் அகதிகள் சம்பந்தப் பிரச்சினைகளை அந்த பூமியிலுள்ள பொது ஸ்தாபனங்கள் மட்டுமன்றி மக்களும் சேர்ந்திணைந்து கவனித்தல் வேண்டும் என்பது அவசியம்.

தற்பொழுது பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தங்கியிருப்பதுடன் பரவலாக ஆங்காங்கே தங்கியுள்ள அகதிகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் யாழ் குடாநாட்டில் உள்ள சமூக ஸ்தாபனங்களும் பொதுமக்களும் எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள்?

சில ஸ்தாபனங்கள் இம்மக்களைப் பற்றிய தகவல்களை மாத்திரம் சேகரித்து வருவதாக தெரியவருகின்றது. இம் மக்களுடைய தகவல்கள் சேகரிக்கப்படும் அதேநேரத்தில் இவர்களின் வயிற்றுப்பசி உடனடியாகத் தீர்க்கப்படல் வேண்டும். இவர்கள் தங்குவதற்கான இடங்கள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படல் வேண்டும். இவர்களுக்கான உடுப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டாக வேண்டும். இவர்களுக்கான மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். இவை யாவும் இம்மக்களுக்கு மிக, மிக அவசியமான அவசரத் தேவைகளாகும்.

கடந்த காலங்களில் முறையே 1958, 77, 83 ஆம் ஆண்டுகளில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பரவலாக அகதி முகாம்கள் அமைக்கப் பட்டிருந்தன. பல சமூக ஸ்தாபனங்களும், பல தனிக் குழுக்களும் இம்முகாம்களை போட்டி போட்டுக்கொண்டு அமைத்தன.

அப்படியான ஒரு நிலைமை இன்றும் வரவேண்டும், நொந்துபோய் வந்தவர்களின் மனக்காயம் மாறுவதற்கான ஒரு சாந்தி நிலையமாக இந்த முகாம்கள் அமையவேண்டும். இதனையே இன்றைய இந்த அகதி மக்கள் வேண்டி நிற்கின்றார்கள்.

கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களுக்கு ஸ்ரீலங்கா அரசினால் மானியமாக உணவுப் பொருட்களும் நிதியும் வழங்கப்பட்டன. சில முகாம்கள் இந்த மானியத்தை மையமாகக் கொண்டு இலாப நோக்குடன் அமைக்கப்பட்டதுமுண்டு. கடந்தகால அகதி முகாம்களின் வரலாற்றுக் கூடாக இதனை நாம் அறிகிறோம்.

தற்போதைய முகாம்கள் கடந்த காலத்தைப் போல் அல்லாது உணர்வு பூர்வமானதாக அமைய வேண்டும். இந்த நடவடிக்கையில் பொது ஸ்தாபனங்களும் நல்லெண்ணம் கொண்ட அனைத்து மக்களும் ஈடுபடவேண்டியதே இன்றைய பிரதான தேவைகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

மாத்தளையான்

# பிரேமாவின் பிரசார யுத்தமும் உண்மை நிலையும்

இலங்கையில் வறுமை ஒழிப்புத்திட்டத்தை நிறைவேற்ற ஆயிரம்கோடி ரூபாய் செலவாகுமென பிறேமதாஸா அரசாங்கம் சுணிட்பீடு செய்துள்ளது. இலங்கையிலுள்ள மொத்த சனத்தொகையில் 75 இலட்சம் பேர் இதில் அடங்குவர். ஆனால் தற்போது தமிழீழ மக்களுக்கு எதிராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யுத்தத் தேவையை பூர்த்தி செய்ய மக்களிடமிருந்து ஐநூறு கோடி ரூபாய் சேகரிக்கும் திட்டத்தைபிறேமதாஸா ஆரம்பித்துள்ளார். இது ஏற்கனவே யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்ட செலவைவிட புதிய செலவுகள் ஆகும். புதிய செலவுகளுக்கும் இந்த வகையில் பிறேமதாஸாவின் ...கப்படுகிறது. இது யுத்த சுமையை இலங்கை அரசு, தாக்குப்பிடிக்க முடியாதென்பதை எடுத்துக் காட்டும் ஓர் அம்சமாகும்.

1989 ஆகஸ்ட் மாதம் திறைசேரியில் கையிருப்பில் இருந்த பணம் ஐம்பது இலட்சம் ரூபாய் மட்டுமே இவ்வாண்டு மே மாத முற்பகுதியில் திறைசேரியில் இருந்த பணம், இருமாதங்களுக்கு போதுமான செலவுமட்டுமே. இது இலங்கை அரசின் நிதி நிலைமையிலுள்ளவங்குரோத்துத்தனத்தைக் காட்டுகிறது. ஜே. ஆர். தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கம் தமிழீழத்திற்கெதிராக நிகழ்த்திய யுத்தத்தினாலும், தென்னிலங்கையில் ஜே.வி.பி.யின் ...

பௌத்த, சிங்கள இனவாதிகளைப் போலவே பிறேமதாஸா அரசாங்கமும், தமிழ் மக்களுக்கெதிரான தனதுயுத்தஎண்ணத்தில் குரூர மனப்பான்மை கொண்ட ஒன்றே இராணுவத்தினரின் யுத்த நோக்கை, அவர்களுடன் சேர்ந்து பிறேமா அரசாங்கம் தமிழீழத்தில் நிறைவேற்ற முன்வந்துள்ளது.

அரசின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவரும், முப்படைகளின் தளபதியுமாகிய ஜனாதிபதி பிறேமதாஸா பௌத்த, சிங்கள இனவெறியின் வெளிப்பாடாயின், தமிழீழமக்களுக்கெதிராக யுத்தப் பிரகடனம் செய்துள்ளார். ஏற்கனவே சீரழிந்துள்ள பொருளாதார நிலையில் ... அரசாங்கத்தின் யுத்தத்தை அரசியல், பொருளாதார கண்ணோட்டத்தில் நோக்குவோமானால், அதில் பிறேமதாஸா அரசாங்கம் பெரும் தோல்வியடைந்து விட்டதென்றே கூறவேண்டும். இராணுவ நோக்கிலும் அவர்கள் எதிர்பார்த்த வெற்றியை ஈட்டவில்லை இன்னொரு வகையில் சொல்லுவதானால் இராணுவ நோக்கில் மிகப் பெரிய சிக்கலில் மாட்டுப்பட்டுள்ளனர்.

பிறேமதாஸா அரசாங்கம் தன்னிடமுள்ள வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலமும், தனது அரசாங்க பேச்சாளர் மூலமாகவும் (உ-ம். ரஞ்சன் விஜேரத்னா). உள் நாட்டிலும் வெளியுலகிலும் ...யும், தனது இராணுவத்தையும், உளவியல் ரீதியாகஸ்திரப்படுத்துவது, மறுபுறம் தமிழ்மக்களையும் விடுதலைப் புலிகளையும், உளவியல் ரீதியாக பலவீனப்படுத்தவும் முயல்கிறது. இதனை பிரசாரயுத்தமென்றும், உளவியல் யுத்தமென்றும் அழைக்கலாம். எனவே பிறேமதாஸா அரசாங்கமானது நேரடி இராணுவயுத்தத்தை மட்டும் கட்டவிழ்த்துவிடவில்லை அதனுடன் சேர்ந்துஉளவியல், பிரசார யுத்தங்களையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அதனுடைய இரண்டாவது நோக்கம் தமிழீழ போராட்டத்தை தான் தோற்கடித்துக் கொண்டிருப்பதாக உலக ...

அவர்களும் மனிதர்கள், அவர்களுக்கும் ஆசாபாசங்கள் உண்டு.

ஆனாலும் இனவாத அரசபடைகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் மண்ணை மீட்பதற்கும் அவர்கள் போரிட்டுக்கொண்டு நிற்கிறார்கள்.

உணவில்லாமலும் உணவிருந்தாலும் உண்பதற்கு நேரமில்லாமலும் உறக்கமில்லாமலும் இரவு பகலாக இருந்தும், கிடந்தும், நடந்தும், ஊர்ந்தும் எதிரிகளுடன் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள் அந்த இளைஞர்கள்.

கடந்த இரண்டு வாரங்களாக நடந்துவரும் போரில் சில போராளிகளே போர்க்களத்தில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டவர்கள்.

உதாரணமாக யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைக்குள் ஆயுதங்களை இறக்கவும் இராணுவத்தைப் பலப்படுத்தி வெளியே படையை அனுப்பி யாழ். நகரை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரவும் சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு, ஹெலித்தாக்குதல்களைக் கடுமையாக மேற்கொண்டு வருகின்றன.

இந்த வானத்தாக்குதல்களை எதிர்கொண்டு கோட்டை இராணுவத்துக்கு ஆயுதங்கள் வழங்குவதையும் அங்கு இராணுவபலம் அதிகரிக்கப்படாமல் தடுப்பதிலும் விடுதலைப் புலிப் போராளிகள் கோட்டையைச் சூழ்ந்து இரவு பகலாக நின்று போரிடுகிறார்கள்.

இந்தப் போரில் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சுக்கு ஒரேயொரு வீரவேங்கைதான் வீரமரணத்தைத் தழுவியிருக்கிறது.

ஆனால் நேரம் தவறாது வீட்டில் விரும்பிய உணவு உண்டு, உறங்கி நண்பர்கள் நண்பிகளுடன் சந்தியிலும் வீதியிலும் நின்று வம்பளந்து, போர்க்களத்தில் நிற்கும் போராளிகளை ''வேடிக்கை பார்த்து'' குண்டுவீச்சுச் சேதமாக்கப்பட்ட பகுதிகளில் விடுப்புப்பார்த்து, வீதிகளில் கூட்டமாக நின்று வானத்தில் வருவது ''பொம்மரா'', ''ஹெலியா'' என்று வாயைப் பிளந்து புதினம் பார்த்து ஹெலிச் சூட்டிலும் விமானப்படையின் குண்டுவீச்சுத் தாக்குதலிலும் அநியாயமாக உயிரைப் பலிகொடுத்த இளைஞர்களின் தொகையைவிட போர்க்களத்தில் வீரமரணமடைந்த இளைஞர்கள் மிகமிகக் குறைவானதே.

அநியாயமாகத் தங்கள் உயிரைப் பலிகொடுக்கும் இந்த இளைஞர்கள் இராமாயணத்தில் வரும் அணில் பிள்ளையைப் போன்றாவது தங்கள் பங்களிப்பை இந்தப் புனிதப் போருக்குச் செலுத்தலாமே!

துப்பாக்கி ஏந்திப் போர் புரிந்துதான் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டுமென்றில்லை. பங்களிப்பைச் செலுத்துவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன.

மனமிருந்தால் மார்க்கமுண்டு.

சோவியத்

# கம்யூ.கட்சி மாநாடு திட்டமிட்டபடி நடக்குமா?

சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்தெட்டாவது மாநாடு திட்டமிட்டபடி அடுத்தவாரம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இன்று வெள்ளிக்கிழமை மேற்படி கட்சியின் மத்தியக் கமிட்டி கூடி எடுக்கவுள்ள முடிவே இறுதியானதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள மிதவாத போக்குடையோருக்கும், தீவிரவாத போக்குடையோருக்கும் இடையிலான கருத்து வேறுபாடே கட்சியின் மாநாட்டை நடத்துவதில் ஏற்பட்டுள்ள இந்த ஈடாட்ட நிலைக்கான காரணமாகும்.

கருத்து வேறுபாடு கொண்டவர்களுக்கிடையிலான முரண்பாடு கூர்மையடைந்திருப்பதனால் மாநாட்டின் போது கட்சி இரண்டாக பிரிந்துப் போய்விடலாம் என்றும் அஞ்சப்படுகின்றது. கட்சிக்குள் இப்படியானதொரு உடைவுவராது பாதுகாத்துக் கொள்ளும் வகையில் பல மாநிலங்களையும் சேர்ந்த மூத்த உறுப்பினர்கள் மாநாட்டை செப்டம்பர் மாதத்துக்கு தள்ளிப் போடுமாறு ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

இலங்கையில் வறுமை ஒழிப்புத்திட்டத்தை நிறைவேற்ற ஆயிரம்கோடி ரூபாய் செலவாகுமென பிறேமதாஸா அரசாங்கம் சணிப்பீடு செய்துள்ளது. இலங்கையிலுள்ள மொத்த சனத்தொகையில் 75 இலட்சம் பேர் இதில் அடங்குவர். ஆனால் தற்போது தமிழீழ மக்களுக்கு எதிராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யுத்தத் தேவையை பூர்த்தி செய்ய மக்களிடமிருந்து ஐநூறு கோடி ரூபாய் சேகரிக்கும் திட்டத்தைபிறேமதாஸா ஆரம்பித்துள்ளார். இது ஏற்கனவே யுத்தத்திற்கு ஒதுக்கப்பட்ட செலவைவிட புதிய செலவுகள் ஆகும். புதிய செலவுகளுக்கும் இந்த வகையில் பிறேமதாஸாவின் 'ஜனசவி' எனப்படும் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் அரைப்பங்கு செலவீனத்தை கொண்டளவு பணம் யுத்தத்திற்காக மக்களிடம் சேகரிக்கப்படுகிறது. இது யுத்த சுமையை இலங்கை அரசு, தாக்குப்பிடிக்க முடியாதென்பதை எடுத்துக் காட்டும் ஓர் அம்சமாகும்.

1989 ஆகஸ்ட் மாதம் திறைசேரியில் கையிருப்பில் இருந்த பணம் ஐம்பது இலட்சம் ரூபாய் மட்டுமே இவ்வாண்டு மே மாத முற்பகுதியில் திறைசேரியில் இருந்த பணம், இருமாதங்களுக்கு போதுமான செலவுமட்டுமே இது இலங்கை அரசின் நிதி நிலைமையிலுள்ளவங்குரோத்துத்தனத்தைக் காட்டுகிறது, ஜே. ஆர். தலைமையிலான யூ.என்.பி. அரசாங்கம் தமிழீழத்திற்கெதிராக நிகழ்த்திய யுத்தத்தினாலும், தென்னிலங்கையில் ஜே வி. பி. யின் அரச எதிர்ப்பு, பொருளாதாரஅழிப்புநடவடிக்கையினாலும் இலங்கை அரசின் பொருளாதார நிலை மிகவும் பாதிப்படைந்திருந்தது ஏனைய பௌத்த, சிங்கள இனவாதிகளைப் போலவே பிறேமதாஸா அரசாங்கமும், தமிழ் மக்களுக்கெதிரான தனதுயுத்தஎண்ணத்தில் குரூர மனப்பான்மை கொண்ட ஒன்றே இராணுவத்தினரின் யுத்த நோக்கை, அவர்களுடன் சேர்ந்து பிறேமா அரசாங்கம் தமிழீழத்தில் நிறைவேற்ற முன்வந்துள்ளது.

அரசின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவரும், முப்படைகளின் தளபதியுமாகிய ஜனாதிபதி பிறேமதாஸா பௌத்த, சிங்கள இனவெறியின் வெளிபபாடாயின், தமிழீழமக்களுக்கெதிராக யுத்தப் பிரகடனம் செய்துள்ளார். ஏற்கனவே சீரழிந்துள்ள பொருளாதார நிலையில், இந்த யுத்த சுமையை பிறேமதாஸா அரசாங்கத்தால் தாக்குப்பிடிக்கமுடியாது. இப்பொழுது தமிழ் ஈழத்திற்கு எதிரான பிறேமதாஸா அரசாங்கத்தின் யுத்தத்தை அரசியல், பொருளாதார கண்ணோட்டத்தில் நோக்குவோமானால், அதில் பிறேமதாஸா அரசாங்கம் பெரும் தோல்வியடைந்து விட்டதென்றே கூறவேண்டும். இராணுவ நோக்கிலும் அவர்கள் எதிர்பார்த்த வெற்றியை ஈட்டவில்லை இன்னொரு வகையில் சொல்லுவதானால் இராணுவ நோக்கில் மிகப் பெரிய சிக்கலில் மாட்டுப்பட்டுள்ளனர்.

பிறேமதாஸா அரசாங்கம் தன்னிடமுள்ள வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலமும், தனது அரசாங்க பேச்சாளர் மூலமாகவும் (உ-ம். ரஞ்சன் விஜேரத்னா). உள்நாட்டிலும் வெளியுலகிற்கும் தான் ஒரு வெற்றியீட்டியதற்கான மாயையைத் தோற்றுவிக்க முயல்கிறது. இதில் இரண்டுநோக்கங்கள்உள்ளன. ஒரு புறம் சிங்கள மக்களையும், தனது இராணுவத்தையும், உளவியல் ரீதியாகஸ்திரப்படுத்துவது, மறுபுறம் தமிழ்மக்களையும் விடுதலைப் புலிகளையும், உளவியல் ரீதியாக பலவீனப்படுத்தவும் முயல்கிறது. இதனை பிரசாரயுத்தமென்றும், உளவியல் யுத்தமென்றும் அழைக்கலாம். எனவே பிறேமதாஸா அரசாங்கமானது நேரடி இராணுவயுத்தத்தை மட்டும் கட்டவிழ்த்து விடவில்லை அதனுடன் சேர்ந்துஉளவியல், பிரசார யுத்தங்களையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. அதனுடைய இரண்டாவது நோக்கம் தமிழீழ போராட்டத்தை தான் தோற்கடித்துக் கொண்டிருப்பதாக உலக மக்களுக்கு காட்டுவது இதன் மூலம் தனக்கு உலகரங்கில் பொருளாதார ஆதாயத்தை தேட முற்படுவது. அதாவது பிரச்சினையை வெற்றிகரமாக முறியடித்தால் அதன் பின்பு இலங்கையில் அமைதி நிலவுமென நம்ப வைத்து வெளிநாட்டு நிதி உதவிகளையும் முதலீடுகளையும் கவருவது இத் தந்திரங்கள் எல்லாம் உண்மையில் வெற்றியளிக்கப் போவதில்லை. அரச வெகுஜனத்தொடர்பு சாதனங்களில் பொய்பிரசாரங்களும், அரசாங்கப் பேச்சாளர்களின் பொய் அறிக்கைகளும் கண்ணுக்குத் தெரியக் கூடிய வகையில் பொய் என இப்போது புலனாகத் தொடங்கி விட்டது.

இதேபோலவே அரசியற் பொருளாதார ரீதியில் ஏற்பட்டுள்ள தோல்வியானது, இன்னும் ஓரிரு மாதங்களில் துலாம்பரமாகத் தெரியத் தொடங்கிவிடும். இந்த யுத்தமானது தென்னிலஙகை அபிவிருத்தியை மிகவும் பாதிக்கும் இதனால் வெளிநாட்டு நிதிகளும் கணிசமான அளவு தடைப்படும். மேலும் காலம் செல்லச்செல்ல பிறேமதாஸா அரசாங்கத்தின் பொய்ப்பிரசாரங்களும், பசப்பு வார்த்தைகளும், மாயைத் தோற்றங்களும் அம்பலமாகிவிடும். மீளமுடியாத பொருளாதார சுமையில் அரசாங்கம் சிக்குண்டு தவிக்கும் தமிழீழ மக்களுக்கு எதிராக எய்யப்படும் ஒவ்வொரு அம்பும், 'பூமறாங்' போல பிறேமதாஸா அரசாங்கத்தின் தலையிலும், சிங்கள மக்களின் தலையிலும் திரும்பி உதைக்கும். ஆதலினால் இப்போதைய யுத்தத்தின் பெறுபேறுகளை சிங்கள, பௌத்த அரசானது இன்னும் ஒரு சில மாதங்களில் கசப்பானது என உணரும்.

# அமெரிக்காவில் வரி அதிகரிப்பு; புஷ்ஷுக்கு எதிராகக் கண்டனம்!

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் புதிய வரிகளை அறவிடுதல், ஏற்கனவே இருந்த வரிகளை உயர்த்துதல் ஆகிய நடவடிக்கைகளை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மேற்கொண்டுள்ளார். அண்மையில் கொண்டுவரப்பட்ட பட்ஜட்டில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் அடிப்படையிலேயே இந்த புதிய வரி அறவிடுதலும். ஏற்கனவே இருந்த வரியை அதிகரிக்கச் செய்தலுமான இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகின்றது

அமெரிக்காவின் புதிய பட்ஜட்டில் 16 ஆயிரம் கோடி டாலர் துண்டு விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

துண்டு விழுந்துள்ள இந்த பட்ஜட் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் ஜனாதிபதி புஷ் மேற்கொண்டுள்ள புதிய வரி, வரி அதிகரிப்பு ஆகிய நடவடிக்கைகளுக்கு பரவலாக எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அத்துடன் 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது [illegible]களுக்கு அளித்த வாக்குறுதியை திரு புஷ்மீறி விட்டதாகவும் கண்டனஙகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்க பட்ஜட்டில் ஏற்பட்டுள்ள இந்தப்பற்றாக்குறை உலக நாடுகளையும்பாதிக்கலாம் என்று நம்பப்படுகின்றது

பாதுகாப்பு செலவினங்களை குறைத்தல், உற்பத்தி வளர்ச்சிகளை ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் மாத்திரம் இந்த பட்ஜட் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாது என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளனார்.

இலங்கை அரசின்

# இராணுவ நடவடிக்கை குறித்து இந்தியா உன்னிப்பாக கவனிப்பு

(டில்லி)

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து மிகவும் உன்னிப்பாக கவனம் செலுத்தி வருவதாக இந்தியா தெரிவித்துள்ளது

இலங்கைத் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து இந்திய வெளியுறவு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் டில்லியில் தகவல் தருகையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை அடைந்துள்ளதாகவும் அதிகாரி தெரிவித்துள்ளதுடன், வடக்கு, கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் குறித்தும், தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள்குறித்தும் தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழக முதலமைச்சர் கலைஞர் மு கருணாநிதி தமிழ் மக்களைக் கொன்று குவித்து வரும் நடவடிக்கையை இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கண்டனம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழின அழிப்பை இந்தியா தடுக்க வேண்டும்

## அனைத்திந்திய அ. தி. மு. க

(சென்னை)

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ் மக்கள் மீதான அழிப்பு நடவடிக்கைகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா தி. மு க இந்திய மத்திய அரசுக்கும், தமிழக மாநில அரசுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

செல்வி ஜெயலலிதா தலைமையிலான அனைத்திந்திய அண்ணா தி. மு க வின் முப்பத்தேழு பேர் கொண்ட கமிட்டியே இந்திய மத்திய அரசுக்கும், தமிழக மாநில அரசுக்கும் சென்னையிலிருந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அ. அ. தி. மு. க வின் இந்த வேண்டுகோளில் இலங்கையில் நடக்கும் இந்த இன அழிப்புக்கு எதிராக இந்தியா தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## அகதிகளுக்கு அமெரிக்கா உதவி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்காக அமெரிக்கா ஒரு கோடி ரூபாவை வழங்க முன் வந்துள்ளது.

# யாழ். மாவட்டத்தில் 237 முகாம்களில் 30000 மேற்பட்ட அகதிக்குடும்பங்கள்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு வாரங்களாக தொடர்ந்து நடைபெற்றுவரும் மோதல்களினால் யாழ். மாவட்டத்தில் மட்டும் 30,373 குடும்பங்கள் அகதிகளாகியுள்ளனர்.

யாழ். செயலகத்தில் நேற்று வரை எடுக்கப்பட்ட கணக்கெடுக்குப் பின்படி யாழ். மாவட்டத்தில் 237 அகதி முகாம்கள் உள்ளன. இவற்றில் 30373 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 151865 பேர் அகதிகளாக தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இவற்றில் திருக்கோணமலை, மட்டக்களப்பு முல்லைத்தீவு, வவுனியா போன்ற வெளி மாவட்டங்களைச் சேர்ந்த அகதிகளாக மொத்தம் 3,000 குடும்பங்கள் யாழ். மாவட்டத்திற்கு வந்துள்ளனர்.

இந்தக் கணக்கெடுப்பைவிட பல குடும்பங்கள் தமது உறவினர் வீடுகளுக்கும் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

## மன்னார் மாவட்டத்தில் 23 முகாங்களில் அறுபத்தோராயிரத்து நானூறு அகதிகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பதினான்காயிரத்து முன்னூற்றி ஐம்பது குடும்பங்களைச் சேர்ந்தஅறுபத்தோராயிரத்து நானூறு பேர் அகதிகளாயுள்ளனர்.

இருபத்தி மூன்று முகாம்களில் இவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து மன்னார் நகரப்பகுதியை நோக்கி அடிக்கடி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதால் பல கடைகள் சேதமடைந்தன. பலர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் கச்சேரியும் ஷெல் தாக்குதலுக்கு உள்ளானதால் சனிவிலேஜுக்கு அது மாற்றப்பட்டது. இதேபோல் மன்னார் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தாராபுரத்துக்கும் மாற்றப்பட்டுள்ளது.

மன்னார் நகரம் வெறிச்சோடிக் காணப்படுகிறது. ஒரு வாரத்துக்கு போதுமான உணவுப் பொருள் களஞ்சியத்தில் இருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மன்னார் பிரதானபாலம் உடைந்துவிட்டதால் அத்தியாவசிய பொருட்களை கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தலைமன்னாரில் 27ஆம் திகதி பொம்பர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தலைமன்னார், பேசாலை, தாழ்வுபாடு கடற்பகுதியில் கடற்படை படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இப்பகுதி மக்கள் பலர் இந்தியாவுக்கு படகுகளில் சென்றுள்ளனர்.

பிரான்ஸிலிருந்து இங்கு வந்த வைத்திய நிபுணர்கள் வெளியேறிவிட்டனர். செஞ்சிலுவைச் சங்கத்தினர் வருவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## இந்து இளைஞர் பேரவை கோரிக்கை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தை நோக்கிப் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அகதிகளாக வந்து கொண்டிருக்கும் அனைத்துப் பிரதேச மக்களுக்கு உதவி வழங்கும் பொது நிறுவனங்களுடன் இணைந்து சேவை ஆற்றிக் கொண்டிருக்கும் பொது மன்றங்கள் மேலும் விரிவான முறையில் உதவி வழங்குமாறு சகல இந்து சமய நிறுவனங்களையும், இந்து இளைஞர் மன்றங்களையும் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சார்பில் பேரவைத்தலைவர் திரு. வே. கெ. தனபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## புலிகளுக்கும் மக்களுக்கும் வேற்றுமை காட்டவில்லை

விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே அரசு சண்டையிடுவதாகவும். பொதுமக்களுக்கு தீங்கு ஏற்படாத வகையில் இராணுவம் நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை அரசு கூறினாலும் ஓமந்தையிலும் அதன் பகுதிகளிலும் இடம்பெற்ற சம்பவங்கள் பொதுமக்களுக்கும் புலிகளுக்கும் வேற்றுமை காட்டப்படவில்லை என்பதையே காண்பிக்கிறது.

இவ்வாறுலண்டனில்இருந்து வெளியாகும்இன்டிப்பென்ரன் பத்திரிகை தெரிவிக்கிறது.

மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இராணுவ ஹெலிகப்டர் குண்டுமாரி பொழிந்ததாகவும் இரண்டாயிரம் அடி உயரத்தில் பறந்ததாகவும்அப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெலிகப்டர் தாக்கிய இப்பகுதியில் பொதுமக்களைத் தவிரவிடுதலைப்புலிகள் இருக்கவில்லை என்றும் அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## தபாற்சேவை ஊழியர்களுக்கு

## படகுமூலம் வடமராட்சிக்கு திருமலை அகதிகள்

(வடமராட்சி கிழக்கு)

திருமலையிலிருந்து நூற்றுக் கணக்கான அகதிகள் கடல் வழியாக படகுகள் மூலம் வடமராட்சி கிழக்கில் உள்ளஉடுத்துறை என்னுமிடத்தில் வந்து தஞ்சமடைந்துள்ளார்கள்.


தொடர்ந்தும் படகுகளில் அகதிகள் வந்துகொண்டே இருக்கின்றார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை

யில் உள்ள மக்கள் தம்மிடம் உள்ள சிறு தொகையான உணவுப் பொருட்களை வழங்கினார்கள்.

தற்போது, உணவு, உடை, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளைப்பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அகதிகள் உள்ளார்கள்.

அகதிகளுக்கு உணவு, உடை சுகாதாரம் போன்ற உதவி




## பொலிஸ் அத்தியட்சகர்களை விடுதலை செய்து விட்டோம்

(வவுனியா)

கடந்தபதின்மூன்றாம் திகதி புதன்கிழமை எம்மால் மேற்கொள்ளப்பட்ட வவுனியா பொலிஸ்நிலையச் சுற்றிவளைப்பின்போது, பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட அனைத்துப் பொலிஸ் காரர்களும் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டு விட்டனர் என்று வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

மேற்படி பொலிஸ் நிலையச் சுற்றிவளைப்பின்போது, எம்மால் வவுனியா பொலிஸ் அத்தியட்சகரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் கைது செய்யப்பட்டு கடத்தப்பட்டுள்ளனர் என்று வெளியான செய்தியில் எதுவித உண்மையுமில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 15ஆம் திகதி கொழும்பிலிருந்து வெளிவரும் தினபதி பத்திரிகையும் இச் செய்தியை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (தி)

## புலிகளின் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என தாம் அவரிடம் கேட்டுக் கொள்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மக்கள் கொலை செய்யப்படுவது குறித்து தமிழகமுதல்வர் அறிக்கை விட்டிருப்பது குறித்து கருத்து தெரிவித்த அவர் விடுதலைப் புலிகளின் உயிரைப்பற்றி அக்கறை கொண்டுள்ள தமிழகமுதல்வர் சென்னையில் ஈ.பி.ஆர்.எல். எவ். உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டபோது என்ன

## இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்பாக நேற்று முன்தினம் ஹெலித்தாக்குதலில் காயமடைந்த சாந்தி ரத்தினம் விஜயப்பிரகாஷ்நேற்று மானிப்பாய் ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார். இவர் அஞ்சல் திணைக்கள பிரதேச அலுவலகத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கடற்படை

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அனுமதிப்பதாக இல்லை. எவரும் வீடுகளிலிருந்து வெளியேறக் கூடாது, வெளியேறினால் வீடுகள் தீமூட்டி எரிக்கப்படும் என்று

## மூதூரை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணத்தில் பல பொதுமக்களை விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து படையினர் விடுவித்துள்ளனர்

மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் திருப்திகரமான முறையில் நிலைமை வந்துள்ளது இங்குள்ள பிரதான நகரங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

### இன்னும் படை கைப்பற்றவில்லை

திருக்கோணமலையில் மூதூர் பகுதியை இன்னமும் படையினர் கைப்பற்றவில்லை.

ஏற்கனவே பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வரும் பொதுமக்கள் மேலும் துன்பப்படக்கூடாது என்பதை தடுப்பதற்காக பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

### மன்னார் வவுனியாவில் சண்டை நீடிக்கிறது

வடபகுதியில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் படையினர் சண்டையிட்டு வருகின்றன.

இங்கு கண்ணிவெடிகள், பொறிவெடிகளால் படையினரில் பலர் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கோட்டையில் படையினர் விடுதலைப் புலிகளைச் சுற்றி வளைத்து அவர்களை பலவீனமடையச் செய்துள்ளனர்.

விமானத்திலிருந்து குண்டு

## ...ிகளுக்கும் மக்களுக்கும்
## ...பற்றுமை காட்டவில்லை

...லைப் புலிகளுக்கு எதி
... அரசு சண்டையிடுவ
... பொதுமக்களுக்கு
... ஏற்படாத வகையில்
...வும் நடவடிக்கை
... வருவதாக இலங்கை
...றினாலும் ஓமந்தை
... அதன் பகுதிகளிலும்
...பற்ற சம்பவங்கள்
...மக்களுக்கும் புலிகளுக்
...வற்றுமை காட்டப்பட
... என்பதையே காண்
...து.
...பாறுலண்டனில்இருந்து வெளியாகும்இன்டிப்பென்ரன் பத்திரிகை தெரிவிக்கிறது.

மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இராணுவ ஹெலிகப்டர் குண்டுமாரி பொழிந்ததாகவும் இரண்டாயிரம் அடி உயரத்தில் பறந்ததாகவும்அப் பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஹெலிகப்டர் தாக்கிய இப் பகுதியில் பொதுமக்களைத் தவிரவிடுதலைப்புலிகள் இருக்கவில்லை என்றும் அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## ...ாற்சேவை ஊழியர்களுக்கு
## ...ளமும் ஊக்குவிப்பு பணமும்

(யாழ்ப்பாணம்)
...ாகாணத்தில் உள்ள
...பாலான தபாற் கந்
...ளுக்கும் மாவட்ட அத்
...கர் காரியாலயங்களுக்
...ன்று மானிப்பாய்
... ரியூசன் சென்ரறில்
...ப்பாய் அந்தோனியார்
...லுக்கு அருகாமையில்)
... கப்பட்டிருக்கும் கணக்
... பிரிவில் மூன்று மாத
...விப்புப் பணமும் ஜுன்
... சம்பளமும் வழங்கப்
... என்று வடமாகாண
...பாளர் எஸ். எம். சேது
...ர் அறிவித்துள்ளார்.
... சம்பள பணத்தினை
...ஊக்குவிப்புப் பணத்தி
...ம் தபால் கந்தோருக்கு
...ப்பாய் உள்ள தபால திபர்கள் மட்டும் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

மேலும் மன்னார் மாவட்ட அத்தியட்சகர் காரியாலயம், முல்லைத்தீவு அத்தியட்சகர் காரியாலயம், எருக்கலம்பிட்டி, காங்கேசன்துறை, கொடிகாமம், முருங்கன், முள்ளியவளை, முல்லைத்தீவு, மன்னார், ஒட்டுசுட்டான், மடுசேச் தபால் கந்தோர்களுக்கு நாளை (30-6-90) வழங்கப்படும் என்றும் வடமாகாண பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பளக் கொடுப்பனவுகளுக்கு 4.5 மில்லியன் ரூபா தேவைப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## ...தன்மராட்சியில் அகதிகள்
## ...4000 குடும்பங்கள் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)
...ன்மராட்சிப் பகுதியில்
...பிரம் குடும்பங்களுக்கு
... அகதிகளாகத் தஞ்ச
...ந்துள்ளதாகவும், அகதி
...எண்ணிக்கை தற்போது
...ரித்து வருவதாகவும்
...மராட்சி அகதிகள் நிவா
...கழகம் தெரிவித்துள்

...ற்குழி கிழக்கு வீட
...ுத் திட்டம், நாவற்
... மேற்கு வீடமைப்புத்
...ம் நாவற்குழி மகா
...பாலயம், கிருஷ்ணர்
...ல், மறவன்புலோ புதிய
...மப்புத் திட்டம், தனங்
... பிள்ளையார் கோவில்,
... மட்டுவில் ஆர். டி.
... மண்டபம், மட்டுவில்
...ஸ்கந்தா, சந்திரபுரம்
... நிலையம், ஐங்கரன்
...க நிலையம், காளி
...ல், சாந்தநாயகி மகா
...யாலயம், மட்டுவில்
... வித்தியாலயம், சரசாலை தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை கோவில் குடியிருப்பு, லிகோரியார் தேவாலயம், சரசாலைதெற்குஅ.த.க. பாடசாலை, கச்சாய் வடக்கு ஏலம் பிள்ளையார் கோவில் கொல்லம் போக்கட்டி அ. த. க. பாடசாலை, கொடிகாமம் தெற்கு மாதா கோவில் கரம்பைக்குறிச்சி அ. த. க. பாடசாலை, இடைக்குறிச்சி சுப்பிரமணியவித்திய[illegible]ாலை, வரணி மகா வித்[illegible]ாலயம், நாவற்காடு கி. அ.[illegible] ச. மண்டபம், கைதடி இ[illegible]ட்சண்ய சேனை இல்லம், சாவகச்சேரி தேவாலயம் ஆகிய இடங்களிலேயே அதிக எண்ணிக்கையானோர் தங்கியுள்ளனர். இவர்களுக்குவேண்டிய உணவு உடை, மருத்துவ உதவிகளை வழங்குமாறு அவ்வப்பகுதியிலுள்ள சமூகசேவை ஸ்தாபனங்களை அகதிகள் நிவாரணக் கழகம் கேட்டுள்ளது. (மு)

---

வந்த வைத்திய நிபுணர்கள் வெளியேறிவிட்டனர். செஞ்சிலுவைச் சங்கத்தினர் வருவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது.

...பேரவைத்தலைவர் திரு. வே. கெ. தனபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## படகுமூலம் வடமராட்சிக்கு திருமலை அகதிகள்

(வடமராட்சி கிழக்கு)

திருமலையிலிருந்து நூற்றுக் கணக்கான அகதிகள் கடல் வழியாக படகுகள் மூலம் வடமராட்சி கிழக்கில் உள்ளஉடுத்துறை என்னுமிடத்தில் வந்து தஞ்சமடைந்துள்ளார்கள்.

தொடர்ந்தும் படகுகளில் அகதிகள் வந்துகொண்டே இருக்கின்றார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை மூன்று இயந்திரப் படகுகளில் திருமலையிலிருந்து 175 பேர் உடுத்துறைக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகளாவார்கள்.

இதனைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் அகதிகள் வந்து கொண்டே இருக்கின்றார்கள்.

உடுத்துறையில் உள்ள சில வீடுகள் அவர்கள் தங்குவதற்காக ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

திருமலையிலிருந்து வந்து சேர்ந்தவர்களுக்கு அப்பகுதியில் உள்ள மக்கள் தம்மிடம் உள்ள சிறு தொகையான உணவுப் பொருட்களை வழங்கினார்கள்.

தற்போது, உணவு, உடை, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளைப்பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அகதிகள் உள்ளார்கள்.

அகதிகளுக்கு உணவு, உடை சுகாதாரம் போன்ற உதவிகளை வழங்குவதற்கு பொது ஸ்தாபனங்களின் உதவிகள் தேவைப்படுகின்றன.

வடமராட்சி கிழக்கில்உள்ள அகதிகளுக்கான நிவாரணப் பணிகளைச் செய்வதற்கான பொறுப்பு ''போரூட்'' ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ள போதிலும், அந்த ஸ்தாபனம்தம்மிடம் பணமோ பொருட்களோ கைவசம் இல்லையென கைவிரித்துள்ளது.

இதனால் வடமராட்சி கிழக்கிற்கு வந்து சேர்ந்துள்ளஅகதிகள் பெரும் கஷ்டத்தினை எதிர் நோக்கவேண்டியுள்ளது.

## முல்லைத்தீவு ஆஸ்பத்திரி இடமாற்றப்பட்டுள்ளது

(முல்லைத்தீவு)

செஞ்சிலுவைச் சங்கப் பொருட்களை முல்லைத்தீவில் ஸ்ரீலங்கா ராணுவம் கொள்ளை அடித்ததைத் தொடர்ந்து முல்லைத்தீவு ஆஸ்பத்திரி, குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு இடம்பெயர்ந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்களின் நலன் கருதி புதுக்குடியிருப்பில் வைத்திய சேவை விஸ்தரிக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் இருந்த பெறுமதிவாய்ந்த சகல உபகரணங்களும் இவ் ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கின்றன. (58)

---

### புலிகள்-இராணுவம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் விடுதலைப்புலிகள் தரப்பில் மூவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாக தம்பலகாமம் பகுதியிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. (லோ)

---

### அனாதைகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை பார்த்திராத புதிய ரக விமானமொன்று காலையில் இப்பகுதியில் பல முறை வட்டமிட்டதாகவும் திடீரென எதிர்பாராத விதமாக அவ் விமானம் தாழப் பதிந்து றொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது. இத்தாக்குதலால் பாடசாலைப் பிள்ளைகளும், ஆசிரியரும் காயமடைந்துள்ளனர். (மு)

## இந்தியக் குண்டுக்கு சிறுமி பலி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கச்சன் வீதியில் முன்னர் இருந்த இந்திய இராணுவமுகாம் பகுதிக்குள் குப்பை எரித்தபோது குண்டொன்று வெடித்ததினால் சிறுமி ஒருவர் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் சிவலிங்கம் சுதாசினி (20) என்பவராவார்.

---

### யாழ் செஞ்சிலுவை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னில் மிகவும் சொற்பமான அளவிலேயே வந்துள்ளது. இவை அத்தியாவசிய, அவசர சிகிச்சைக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். இம் மருந்துப் பொருட்களுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியொருவரும் யாழ். வந்துள்ளார். (ம)

---

இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

மேற்படி பொலிஸ் நிலையச் சுற்றிவளைப்பின்போது, எம்மால் வவுனியா பொலிஸ் அத்

---

### புலிகளின் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என தாம் அவரிடம் கேட்டுக் கொள்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மக்கள் கொலை செய்யப் படுவது குறித்து தமிழக முதல்வர் அறிக்கை விட்டிருப்பது குறித்து கருத்து தெரிவித்த அவர் விடுதலைப் புலிகளின் உயிரைப்பற்றி அக்கறை கொண்டுள்ள தமிழகமுதல்வர் சென்னையில் ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டபோது என்ன செய்து கொண்டிருந்தார் என்றார்.

இக்கொலை தமிழ் நாட்டில் இடம்பெறமுதலமைச்சர் ஏன் இடமளித்தார். தென்னிந்தியாவில்இலங்கையர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

தமிழ்நாட்டில்தஞ்சம்புகுந்த தமிழ் இயக்கங்களைப் பாதுகாப்பது தமிழக முதல்வரின் பொறுப்பாக இருந்தது.

கொலைகாரர்களைக் கைது செய்ய தமிழக முதல்வர் நடவடிக்கை எடுக்கவில்லை.

அண்டை நாடுகளின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிட மாட்டாதென பிரதமர் வி. பி. சிங் கூறியதற்கு நன்றி கூறுகிறேன். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

---

### நெடுந்தீவில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வருவதிலும் சேகரித்து வைப்பதிலும் பல கஷ்டங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை பலர் யாழ்ப்பாணத்திலிருந்தும், வேறு இடங்களிலிருந்தும், வந்து தமது உறவினர் வீடுகளிலும், கோவில்களிலும் அகதிகளாகத் தங்கியுள்ளனர். (62)

---

### ராஜீவும்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளே காரணமாகும்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தற்போது சில அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். ஆனால் இந்தியப்படைக்கு எதிராக மோதியதும் அதே விடுதலைப்புலிகள்தான் என்பதை ராஜீவ்காந்தி மறந்து விடக்கூடாது.

ராஜீவ் கூறியது போல எவரிடமிருந்தும் இலங்கை எந்த வித உதவிகளையும் கேட்கவில்லை.

எமக்குத் தேவையான ஆயுதங்கள், வெடி மருந்துகளை உலகச் சந்தையில் இருந்தே பெற்று வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

---

### இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்பாக நேற்று முன்தினம் ஹெலித்தாக்குதலில் காயமடைந்த சாந்தி ரத்தினம் விஜியப்பிரகாஷ்நேற்று மானிப்பாய் ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார். இவர் அஞ்சல் திணைக்கள பிரதேச அலுவலகத்தில் எழுது வினைஞராக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

### கடற்படை

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அனுமதிப்பதாக இல்லை. எவரும் வீடுகளிலிருந்து வெளியேறக் கூடாது, வெளியேறினால் வீடுகள் தீமூட்டி எரிக்கப்படும் என்று கடற்படையினர் அச்சுறுத்துவதாகவும் தெரியவருகிறது. வெளியூர்களிலிருந்து பொருள்களை வாங்கிச் சென்றாலும் சோதனை செய்வதாகக் கூறி படையினர் பல கெடுபிடிகளை செய்கிறார்களாம் இரவு என்றும் பாராமல் வீடுகளுக்குள் புகுந்து படையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் மக்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள்.

---

### ஆசிரியர்களுக்கு

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தொகையாவது ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என புகார் செய்யப்படுகின்றது. (36)

---

### இலங்கை வங்கி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுப்படுத்தப்பட்ட பணக் கொடுக்கல் வாங்கல்களுக்காக திறந்திருக்கும் என வங்கியின் பிரதான முகாமையாளர் திருமதி ரி.துரைராஜா அறியத்தந்துள்ளார். (மு)

---

டங்களை அனுபவித்து வரும் பொதுமக்கள் மேலும் துன்பப்படக்கூடாது என்பதை தடுப்பதற்காக பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

### மன்னார் வவுனியாவில் சண்டை நீடிக்கிறது

வடபகுதியில் மன்னார்,வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் படையினர் சண்டையிட்டு வருகின்றன.

இங்கு கண்ணி வெடிகள், பொறிவெடிகளால் படையினரில் பலர் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கோட்டையில் படையினர் விடுதலைப் புலிகளைச் சுற்றி வளைத்து அவர்களை பலவீனமடையச் செய்துள்ளனர்.

விமானத்தில்இருந்து குண்டு வீச்சு தாக்குதல் நடாத்தியதால் புலிகள் பலவீனமடைந்துள்ளனர்

காங்கேசன்துறை, கோட்டை, பலாலி ஆகிய இடங்களில் இருந்து பொதுமக்களை வெளியேறும்படி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

### பாலங்கள் சேதமடைந்தன

விடுதலைப் புலிகள் பின்வாங்கிச் செல்லும்போது போக்குவரத்து வீதிப் பாலங்கள் ஐந்தை சேதப்படுத்தியுள்ளனர்.

படையின் பல கஷ்டங்கள் மத்தியில் முன்னேறிச் செல்கின்றனர். கோட்டை முகாமில் உள்ள இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் உணவுப் பொதிகள் ஹெலிகப்டர்கள் மூலம் நேற்று போடப்பட்டன.

### அகதிகளுக்கு அரசு உணவு வழங்குகிறதாம்

வடக்கு கிழக்கு பகுதிகளில் நான்கு லட்சத்திற்கும் அதிகமானோர் வீடுகளை இழந்து அகதிகளாகியுள்ளனர் இவர்களுக்கு அரசு உணவுப் பொருட்களை வழங்கிவருகிறது எனவும் தெரிவித்தார்.

---


## மரண அறிவித்தல்

### திரு. வி. கைலாயநாதன்

(ஓவியக் கலைஞர்)

திரு. கா. விசுவநாதர் (காலஞ் சென்றவர்) பத்தர் பூமணி தம்பதியரின் புதல்வன் திரு. கைலாயநாதன் 27-6-90 இல் அகால மரணமானார்.

இவர் குருநாதன்(ஆசிரியர்), பத்மநாதன் (ஈழநாதம்), கதிர்காமநாதன். சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரர் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 28ஆம் திகதி அவரின் நாச்சிமார்கோயிலடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தாயார் வி. பூமணி

(B/1205


---

...ப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் ...த்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ... ஜுன் மாதம் 29 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.